to the owners. Should we extend the provisions of the Act for the sake of these 31 houses, is the point to be considered. However, in view of the hon. Member's allegation that the rents are high there, I shall see what can be done in the matter.

Dispute between workers and management of Messrs. Hoe & Co.

* 2428 *Q.*—SRI N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Agriculture be pleased to state whether the Government have received any representation from the workers of Hoe and Company, Madras, during 1955, to settle the dispute with the management regarding the increase of their wages?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: No, Sir.

DEPUTY SPEAKER: Questions are over. We will now continue the general discussion on the Land Revenue Surcharge Billl.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

III.—GOVERNMENT BILL.

THE MADRAS LAND REVENUE (ADDITIONAL SURCHARGE) BILL, 1955 —*cont.*

SRI A. RATNAM: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, வரி விதிக்கும் மசோதாவின்மீது இன்று பேசவேண்டுமென்றால் நாட்டின் முன் நம்முடைய ஆட்சியாளர்கள் கொண்டு வந்திருக்கிற பல சீர்திருத்தங்களை எடுத்துக்கொண்டு பார்க்கும்போது மேலும் மேலும் குறிப்பாக முதன் முதலாக விவசாய மக்களுக்கு வரி விதிப்பது அவசியமா என்பதைப்பற்றி அலசிப் பார்க்கவேண்டிய காலகட்டத்தில் நாம் இருக்கிறோம். விவசாயிகளின்மீது வரி விதிக்கிறார்கள் என்றால் விவசாயத்தை பெருக்குகிற நிலத்தின்மீது ஏற்கெனவே கொடுக்கப்படும் வரியின்மீது ரூபாய்க்கு இரண்டணா அதிகமாக வரி விதிக்கப்படுகிறது. இந்த முறையானது விவசாய மக்களைமட்டும் அல்ல, விவசாயம் செய்கிற விவசாய பண்ணையாட்கள், கூலியாட்கள் உள்பட விவசாயத்தில் ஈடுபட்டிருக்கும் எல்லா மக்களையும் வேகமாக பாதிக்கிறது.

கனம் ரெவினியூ மந்திரி அவர்கள் ஏற்கெனவே ஒரு கூட்டத்தில் பேசும்போது ஒன்றைக் குறிப்பிட்டிருக்கிறார். "எனக்கு ஆந்திர தேசத்தில் நிலம் இருக்கிறது, ஆந்திர நாட்டில், ஆந்திர ராஜ்யத்தில் நிலம் இருக்கிறது, அதை வைத்துக் கொண்டு என்னால் நிர்வகிக்க முடியவில்லை, அதிலிருந்து வருவாய் வரவில்லை, வரி செலுத்துவதற்குக் கஷ்டமாக இருக்கிறது, அந்த நிலங்களை யார் வேண்டுமென்று கேட்டாலும் கொடுத்து விட தயாராக இருக்கிறேன்" என்று சொல்லியிருக்கிறார். இதிலிருந்து என்ன தெரிகிறது என்றால் விவசாயம் செய்கிற வாலிபர்கள் விவசாயம் செய்வதில் லாபம் அடைகிறது இல்லை என்பது நன்றாகத் தெரிகிறது. அவர் இன்னும் என்ன சொல்லி இருக்கிறார் என்றால் தனக்குள்ள நிலங்கள் எல்லாம் அங்கு வீணாகக் கிடக்கிறது, அதை யார் வேண்டுமென்றாலும் எடுத்துக் கொள்ளலாம் என்று அறைகூவல் விடுத்திருக்கிறார். இதிலிருந்து என்ன தெரிகிறது என்றால் விவசாயத்திலிருந்து வருகிற லாபமானது வரி செலுத்துவதற்குக் கூட இயலாத காரியமாக இருந்து வருகிறது என்பது தெரிய வருகிறது. இன்றைய தினம் பண்ணையாட்களையும் கூலியாட்களையும் விவசாயிகளையும் கேட்டால் தங்களுடைய செலவுகளுக்குப் போக மிகுதியை விற்பனை செய்து வரியைக் கொடுத்து